**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 96 of 2024

DATE : 25.09.2025

Depositions of witness for Prosecution

PW: 10

| | | | |
|---|---|---|---|
| Name | காளை முத்தையா | Caste | |
| Father/Husband's Name | பிள்ளையார் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் நத்தம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 05.02.2016 அன்று கூமாபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்த பொழுது அன்றைய தினம் இரவு 20.45 மணிக்கு கூமாபட்டி சார்பு ஆய்வாளர் திரு முனியாண்டி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 29/2016, பிரிவுகள் 294(b), 189, 353 and 506(1) IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.ச.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்குக் கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : –**

காவல் நிலையம் வந்து புகார் மனு கொடுத்த சார்பு ஆய்வாளர் திரு. முனியாண்டி இன்றைய தினம் காவல் நிலையத்தில் முழு பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். புகார் கொடுக்க வரும் பொழுது சார்பு ஆய்வாளர் சீருடையில் இருந்தாரா இல்லையா என்றால் சீருடை இருந்தார். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கையானது வழக்கிற்காக பின்னிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு